ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# திரிகடுகம் கூறும் கல்வி

**முனைவர். சி. கிங்சிலி தேவ ஜோஸ்**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை**
**நேசமணி நினைவு கிறித்தவக்கல்லூரி**
**மார்த்தாண்டம் - 629 165.**

**22**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்ககாலம் தொட்டே தமிழர்களின் கற்றல் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றது. முதலில் பட்டறிவு வாயிலாக கற்றவன் பின்னர் தனது மொழிக்கான எழுத்துக்களைப் படைத்து கல்வி கற்கத் துவங்கினான். கல்வி அறச்சிந்தனைகளை மனிதனுக்கு போதிக்கத் துவங்கியது. கல்விக் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரில் வாழ்தல் கூடாது என அறிவை உரக்க போதித்த நூல்தான் திரிகடுகம். இந்நூல் வாயிலாக கல்வி சார்ந்த பலவித அறச்சிந்தனைகளை ஆசிரியர் நல்லாதனார் எடுத்துக்கூறியுள்ளார். அவற்றை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலில் ஆசிரியர் பெயரும், வாழ்ந்த காலமும் சொல்லப்பட்டுள்ளது. தொடர்ந்து திரிகடுகம் நூலின் வடிவம் பற்றிக் கூறப்படுகிறது. திரிகடுகம் வெளிப்படுத்திய பல்வேறு கல்வி பண்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவைகூறும் அறச்செயல்களை மேற்கோள்களாக காட்டப்பட்டுள்ளது. இளமையில் கற்பதனால் ஏற்படும் பயன்கள், கற்றவரோடு நட்பு பாராட்டுதல், நல்ல நூல்களை கண்டறிந்து பயில்வது, கல்வி மானுட சமுதாயத்தில் ஏற்படுத்தும் மாற்றங்கள், கல்வியில் சிறப்புற்றவர்களின் கடமை ஆகியன பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் கல்வி இன்றியமையாத ஒன்றாகும். இக்கல்வி பற்றிய செய்திகளை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திரிகடுகம் சுமார் முப்பது பாடல்கள் மூலமாக கூறியுள்ளது என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகிறது. சங்க காலத்தில் நல்லாதனாரால் எழுதப்பட்ட கல்வி விழிப்புணர்வு வாக்கியங்கள் தற்கால தலைமுறைக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளதையும் காணலாம்.

**முன்னுரை:**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் நாட்டு மருத்துவத்தில் பயன்படுத்துகின்ற மருந்துகளின் பெயரால் அமைந்த நூல்கள் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய மூன்று நூல்களும் ஆகும். இம்மூன்று நூல்களுள் ஒவ்வொரு பாடலிலும் சிறந்த மூன்று கருத்துக்களை முன்வைக்கின்ற சிறப்புமிக்க நூல் திரிகடுகம் ஆகும். உடலில் ஏற்படும் இடையூறுகளை நீக்கும் திரிகடுகம் என்னும் மருந்து போல மனித வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை நீக்கவும் இடையூறு நெருங்காமல் இருக்க கூறும் அறிவுரைகளின் தொகுப்பாகக் காணப்படுகிறது. 101 வெண்பாக்களைக் கொண்ட இந்நூல், கடைச்சங்க காலத்தில் இயற்றப்பட்டதாக கருதப்படுகிறது. திரிகடுகம் கூறும் கல்வியின் சிறப்பினை இக்கட்டுரையில் காண்போம்.

**ஆசிரியர் குறிப்பு**

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்களைச் சேர்த்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகும். இதில் திரிகடுகம் என்னும் மருத்துவம் சார்ந்த நூலின் பாடல்களை இயற்றியவர் நல்லாதனார் ஆவார். இவரது இயற்பெயர் ஆதனார். இவர் வைணவ சமயம் சார்ந்தவர் எனும் கருத்து காணப்படுகிறது. வாழ்ந்த காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

**திரிகடுகம் நூலின் அமைப்பு**

திரிகடுகம் காப்புச்செய்யுள் உட்பட 101 வெண்பாக்களைக் கொண்டது. நல்லாதனார் என்னும் புலவர் இந்நூலை உருவாக்கியுள்ளார். முதல் பாடலிலேயே நூலின் பெயர்க்காரணத்தை ‘திரிகடுகம் போலும் மருந்து’ என்று ஆசிரியரே குறிப்பிடுகின்றார். சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்த மருந்துக்கு திரிகடுகம் என்று பெயர். அது மனிதர்களின் உடல் நலனைக் காக்க உதவும். அதுபோல ஒவ்வொரு பாடலிலும் மக்கள் நலமுடன் வாழ மூன்று உறுதி பொருட்களை கூறுகின்றமையால் திரிகடுகம் எனப் பெயர்பெற்றது.

திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களின் கருத்துக்களை இந்நூல் பெரிதும் பின்பற்றுகிறது. இவ்வுலகிற்கு நிலவும் உயரிய நல்வழிகளையும் மறுமைக்குரிய வாழ்வின் நல்வழிகளையும் இணைந்து எடுத்துக்காட்டும் நூலாக இந்நூல் காணப்படுகிறது. தனிமனித நலம், குடும்ப நலம், சமூக நலம், நாட்டு நலம் என விரிகிறது திரிகடுகத்தின் பாடல்கள்.

திரிகடுகத்தின் ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று செய்திகளை ஒரு பொதுக்கருத்தோடு இணைத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். பொதுக்கருத்து ஈற்றடியில் இடம்பெற்றுள்ளது, மூன்றாம் அடியின் ஈற்றில் இம்மூன்றும், இவை மூன்றும், இம்மூவர், என மூவர் என்னும் எண்ணுத்தொகை சொற்களில் ஒன்றை அமைத்துள்ளார். இவற்றுள் இம்மூன்றும், இம்மூவர் என்பன மிகுந்துள்ளன. பெரும்பான்மையான பாடல்களில் மூன்று பொருள்களும் எண்ணும்மையால் இணைக்கப்பெற்றுள்ளன.

**திரிகடுகத்தில் சிறப்பிக்கப்படும் கல்வி பண்புகள்**

திரிகடுகத்தில் பல அறச்செயல்கள் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளது. இதில் சிறப்பாக 29 பாடல்களில் கல்வியுடைமை குறித்த செய்தியும், முப்பது பாடல்களில் இல்லற பெண்கள் மற்றும் பரத்தையர் குறித்த செய்தியும் நல்லமுறையில் கூறப்பட்டுள்ளது. கல்வி என்பது பலவகை அறிஞர்களும் பலகலை பயின்றவர்களும் கூடியிருக்கும் அவையில் தானாக வெளிப்படுவதாய் அமைவது ஆகும். ஒருவன் கற்ற கல்வியானது கற்றவர்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் தானாக வெளிப்படும். அவர்கள் வெளிப்படுத்த தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்துகின்றார் ஆசிரியர்.

“…தொக்கிருந்த நல்லவையுள் மேம்பட்ட கல்வியும்” (திரி. 8)

எதை கற்க வேண்டும் என்ற வினாவிற்கு நிரம்ப பலவற்றையும் ஆராய்ந்து அவற்றுள் நல்லவற்றை கற்க வேண்டும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அப்படி நல்லவற்றை கற்பது நல்லவர்களுடைய

சிறந்த கொள்கை என்றும் கூறுகின்றார். அவ்வாறு கற்கும் சிறந்த கல்வி நல்வழிகாட்டும் என்கிறார்.

"…எய்தப் பலநாடி நல்லவை கற்றல் இம்மூன்றும்

நலமாட்சி நல்லவர் கோள் (திரி.21)

மக்களை ஆளும் மன்னர்களின் ஆட்சி அதிகாரத்தை செயல்படுத்தும் அமைச்சர்களுக்கு உரிய பண்பினைக் குறிப்பிடும்போது, ஐம்பொறிகளை அடக்கி அவற்றை தீய வழியில் செல்லாது தம்மிடத்தில் அடங்கி நிற்கும்படி நடத்த வேண்டும் என்கிறார். தனது புலன் அடக்குதலை அமைச்சரும் கல்வியின் மூலமாகவே கண்டடைய முடியும். அமைச்சரின் ஐம்பொறி அடக்கமானது அவர்களின் ஆளுகைக்கு உட்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் ஏற்புடையதாக அமைகின்றது.

"ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்" (திரி.61)

என்கிறார். பகுத்துண்டு இல்லாளோடு கூடி அறம் குறைவின்றி வாழ்தலும் எல்லாவற்றிலும் சிறந்த வாழ்க்கைக்கல்வி என்றும் கூறுகிறார். ஊக்கத்தோடு கூடிய முயற்சியால் செயற்கரிய செயலைசெய்து முடித்தலும் சிறந்த கல்விப்பண்பாகும். எழுந்த சினத்தை அடக்குதல் பெண்களுக்கு வயப்படாமல் அவர்களால் வெறுக்கப்படாமல் நடத்தல், நடுநிலை தவறாத அறிஞர்களுக்கு கொடுத்து தானும் உண்ணுகின்ற தன்மை போன்றவை பழமையான நூல்களைக் கற்பதனால் கிடைக்கக்கூடிய பலன் என்கிறார் திரிகடுகத்தின் வாயிலாக நல்லாதனார். இவ்வாறு கல்வியின் சிறந்த பண்புகள் பலவும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

**கற்பதன் பயன்கள்**

கல்வியின் பலனை சங்க இலக்கிய காலத்திலேயே திரிகடுகம் திறம்பட எடுத்துக்கூறியுள்ளது. மிகுதியாக கற்பதனால் நிறைய பலன்களை பெறமுடியும் எனும் கருத்தை ஆசிரியர் நல்லாதனார் வலியுறுத்துகின்றார். மிகுந்த கேள்வியால் நூல்களின் முடிவை கண்டவர்கள் அழிவற்ற தன்மையை உடைய முத்தி உலகத்தில் நிற்கக்கூடிய சிறப்பினைப் பெறுவார்கள் என்கிறார்.

"நுண்ணூற் பெருங் கேள்வி நூற்கரை கண்டானும் மெய்ந்நீர்மை

மேனிற் பவர்" (திரி.35)

எழுத்தறிவில்லாதவர்கள் பொருளாதார வலிமை மிக்கவர்களாக இருந்தாலும் ஏழைகள் அவர்கள் மனிதர்களாக பிறந்தாலும் பிறப்பின் பலனை முழுமையாக அடையாதவர்கள் என்கிறார்.

"எழுத்தினை யொன்றும் உணராத ஏழையும்

பிறந்தும் பிறவா தவர்" (திரி.92)

பொருளீட்டும் ஆசையால் கல்வியை பாதியில் விட்டுவிடுதல் குற்றங்களை விளைவிக்கின்ற பெரும் பகையாக அமைகிறது என்கின்றார் ஆசிரியர்.

"கற்புப் பெரும் புணை காதலின் கைவிடுதல் குற்றம் தருஉம் பகை"

(திரி. 86)

இளமையில் கல்வி கற்று பெற்றோர்களை வழிபட்டு போற்றி சான்றோர் செல்லும் வழியில் செல்லுதல் ஒருவனுக்கு உயர்வைத் தரும். எனவே இளமையில் கற்பது சிறப்பு என்கிறார் ஆசிரியர்.

"முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு

தந்தையும் தாயும் வழிபட்டு – வந்த

ஒழுக்கம் பெருநெறி சேர்தல் இம்மூன்றும்

விழுப்ப நெறிதூறா வாறு (திரி.56)

கற்பதனால் மனிதன் முழுமை அடைகிறான். அறிவு பெற்று பகுத்தறிவோடு நடந்துகொள்கிறான். இளமையில் கல்வி கற்பவன் தனது பெற்றோரை வணங்கி ஒழுக்கம் மிகுந்த சான்றோனாக மாறுகிறான். நன்கு பாடம் பயின்றவன் சிறந்த அறிஞனாகி புதிய தலைமுறையினருக்கு பயிற்றுவிக்கும் ஆசானாகவும் மாறுகிறான் என்பதையும் திரிகடுகம் எடுத்தியம்புகிறது.

**கற்றவரோடு நட்பு பாராட்டுதல்**

ஒருவன் கல்வி அறிவு உள்ளவனாக இருப்பது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு முக்கியமானது கல்வி அறிவு உள்ளவர் நட்பு பாராட்டுதல் என்பதை வலியுறுத்துகின்றார் நல்லாதனார். அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற நிறைவான தன்மையுடையது. அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையது என்கிறார் மு. வரதராசன்.

கற்றறிந்தவரோடு நட்பு பாராட்ட வேண்டும். கல்வி அறிவு உடையவரை விட்டு நீங்கி வாழ்பவன் நல் உலகங்களை சேராதவர்கள் என்கிறார் நல்லாதனார்.

“கற்றாரைக் கைவிட்டு வாழ்தலும்…

நல்லுலகம் சேரா தவர்” (திரி.99)

கற்றவரோடு நட்பு பாராட்டாமல் கல்லாதவரோடு நட்பு பாராட்டுதல் பலவகையான தீமையை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கின்றார். கல்விக்கு அகன்ற கூட்டத்திலே நுழைகின்றவன் மூடன் என்கின்ற தன்மையை பெறுகின்றான். எனவே கல்விக்கு அகன்ற கூட்டத்தில் இணையக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றார்.

“… கல்விக் ககன்ற இனம்புகு வானும் முழுமக்க ளாக பாலார் (திரி. 87)

அறிவற்றவர்களின் உலகம் இருள் நிறைந்தது. அந்த உலகத்தில் இருப்பவரோடு நட்பு பாராட்டுதல் என்பது அறியாமையைத்தான் வளர்க்கும் என்கிறார் ஆசிரியர். மேலும் கல்வி கற்பிக்க தக்கவர் இல்லாத ஊரில் இருப்பதும், மாறுபட்ட பொருளை தெரிந்திருக்கும் அறிவுபெற்ற மூத்தோர் இல்லாத ஊரில் இருப்பதும் பயனற்றது. எனவே அங்கு இருக்க வேண்டாம் என்று நல்ல ஆலோசனை கூறுகின்றார்.

“கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்

மூத்தோரை இல்லா அவைக்களனும் - பாத்துண்ணும்

தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்

நன்மை பயத்தல் இல”

சொல்லின் குற்றங்களை அறிந்து நீக்கவல்ல கேள்வியை உடையவர்களோடு நட்பு கொண்டிருப்பது திரிகடுகம் போன்ற நல்ல மருந்தாக இருக்கும் என்கிறார் ஆசிரியர். கற்றவர்களோடு நட்பு கொள்ளுதல் ஒரு மனிதனின் தீய குணநலன்களை அழித்து அறிவுசார்ந்த பாதையில் வழிநடத்தும். நல்ல நூலை

கற்றறிந்து அதன் பொருளை தெளிவுற அறியாதவன் விரைந்து சொல்லுகின்ற வார்த்தைகள் பயனற்றவையாக அமைகிறது என்கிறார் நல்லாதனார்.

**கற்றறிந்தார் கடமை**

நூல்களைக் கற்று ஆராய்ந்து நுட்பமான பொருளைக் கொள்வதும், பயனற்றச் சொல்லை கூறாமையும் நல்ல கருத்துக்களை அவற்றை விரும்பி கேட்பவர்களுக்கு கற்பிப்பதும் கல்வியை அதாவது பல நூல்களைப் படித்து உணர்ந்தவர்களின் கடமையாகும் என்கிறார் ஆசிரியர்.

"நுண்மொழி நோக்கிப் பொருள் கொளலும் நூற்கேலா
வெண் மொழி வேண்டினுஞ் சொல்லாமை – நன் மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்" (திரி. 32)

கற்றறிந்த ஆசிரியர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கு சினம் அடையாமல் இன்முகத்தோடு கற்பிக்க வேண்டும். அப்படி இன்முகத்தோடு கற்பிக்கின்ற போதுதான் சிறந்த கல்வியை கொடுக்க முடியும். அவ்வாறான கல்விக்கூடங்களே சிறந்தது. மற்ற கல்விக்கூடங்களை அறிவுடையவர்கள் விரும்பமாட்டார்கள் அவை வீண் என்கிறார் திரிகடுகத்தின் வாயிலாக நல்லாதனார்.

**முடிவுரை:**

தமிழில் அறச்சிந்தனைகளை வெளிப்படுத்திய நூல்களில் ஒன்றுதான் திரிகடுகம். இந்நூல் வாயிலாக கல்வி சார்ந்த பலவித சிந்தனைகளை ஆசிரியர் நல்லாதனார் எடுத்தியம்புகிறார். இக்கட்டுரையில் முதலில் ஆசிரியர் குறிப்பும் தொடர்ந்து திரிகடுகம் நூலின் அமைப்பும் கூறப்படுகிறது. திரிகடுகம் எடுத்துக்கூறிய பல்வேறு கல்வி பண்புகள் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அவை அறச்செயல்களை சுட்டுகின்றன. இளமையில் கற்பதனால் ஏற்படும் பயன்கள், கற்றவரோடு நட்பு பாராட்டுதல், நல்ல நூல்களை கண்டறிந்து பயில்வது, கல்வியில் சிறப்புற்றவர்களின் கடமை ஆகியன பற்றி எடுத்துரைக்கபட்டுள்ளது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதருக்கும் கல்வி இன்றியமையாத ஒன்றாகும். இக்கல்வி பற்றிய செய்திகளை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திரிகடுகம் சொல்லியவற்றை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகிறது. சங்க காலத்தில் நல்லாதனாரால் எழுதப்பட்ட கல்வி விழிப்புணர்வு வாக்கியங்கள் தற்கால தலைமுறைக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளதைக் காணலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. இராமசுப்பிரமணியன், பதினெண்கீழ்க்கணக்கு தொகுதி-1, செல்லப்பா பதிப்பகம், மதுரை-1

2. முத்துராமன், ஆ, வாழ்வியல் சிந்தனைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை -17